மாவட்டத்தில் 5 டன் கிடைக்கிறது. ஆனால் உலக ஆராய்ச்சியிலே இன்றைக்கு 70 டன் வரை கிடைக்கிறது. அதைப்போன்று ஆராய்ச்சிகள் தமிழகத்திற்கு வரவேண்டும். குறைந்த அளவு ஒரு ஹெக்டேரிலே 50 டன்னிலிருந்து 60 டன் வரை தக்காளி கிடைக்கவேண்டும் என்பதற்கான ஆராய்ச்சி இன்றைக்குத் தேவை. அதுமட்டுமல்ல, ஒரு இடத்திலே ஒரு ஹெக்டேருக்கு 12 டன் நெல் மகசூல் கிடைக்கிறது. ஆனால் ஒரு சில இடங்களில் ஒரு டன்கூட கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்று நாம் நிலத்தடி நீரை வெகுவாகப் பயன்படுத்திவிட்டோம். நிலத்தடி நீரை இனி சிக்கனமாக நாம் பயன்படுத்த வேண்டும். நீர்நிலைகளை இனி பெருக்குவதற்கான வாய்ப்பு இல்லை. இருக்கக்கூடிய நீர்நிலைகளைக் கொண்டு நீரை நாம் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். பெருகி வரக்கூடிய மக்கள் பெருக்கத்திற்கு ஏற்றவாறு உணவு உற்பத்தியை நாம் பெற்றாக வேண்டும். அதுமட்டுமல்ல, நம்முடைய வேளாண்மைப் பொருட்களை மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய காலத்தை நோக்கி, இன்றைக்கு புரட்சித் தலைவி அரசு 'மகராசி வேளாண்மை 2000' என்ற சீரிய திட்டத்தினைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

**71—**

### தமிழகத்தில் தனியார் சர்க்கரை ஆலை துவங்குதல்

*10904—திரு. டி. சுதர்சனம்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழகத்தில் புதிதாக தனியார் சர்க்கரை ஆலை துவக்க அனுமதி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 மார்ச் 20]*

(ஆ) தமிழ்நாட்டில், செங்கை--எம்ஜி.ஆர். மாவட்டம் காஞ்சிபுரம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூர், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை, தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஆகிய 5 இடங்களில் தனியார் துறையில் நாள் ஒன்றுக்கு 2500 டன் அரவைத் திறன்கொண்ட 5 சர்க்கரை ஆலைகளைப் புதிதாக அமைக்க மத்திய அரசின் அனுமதி கோரி, மாநில அரசு பரிந்துரை செய்துள்ளது. இவைகளில், காஞ்சிபுரம், மற்றும் போளூர் ஆகிய இரண்டு இடங்களில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க மத்திய அரசு சென்ற ஆண்டு அனுமதி வழங்கி புதிய ஆலைக்கான நிர்மானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஏனைய மூன்று மனுக்களும் மத்திய அரசின் அனுமதிக்காக காத்து இருக்கின்றன.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கி, சர்க்கரை ஆலைகள் துவக்கப்படாமல் இருப்பது எத்தனை என்பதை அரசு அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வேண்டும் என்று மத்திய அரசுக்கு அனுப்பியிருந்தோம். அதில் மத்திய அரசு, காஞ்சிபுரத்திற்கும் போளூருக்கும் அனுமதி வழங்கி, இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஏற்கனவே அனுமதி வழங்கி, பணி தொடங்காமல் இருக்கிற சர்க்கரை ஆலைகள் எதுவும் தமிழகத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டியில் ஒரு சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்து, இன்னும் அங்கே பணி துவக்கப்படவில்லை. அதேபோன்று தஞ்சாவூரிலே ஒரு சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு தனியாருக்கு அனுமதி வழங்கி, அதுவும் இன்னும் பணி துவக்கப்படவில்லை. விவசாயிகள் கரும்பு உற்பத்தியை இன்றைக்கு அதிகமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். கரும்பை எடுத்துக் கொண்டு சர்க்கரை ஆலைகளுக்குச் செல்வது என்பது மிகவும் கடினமாக இருக்கிற ஒன்றாகும். அதனால், 500 டன் அல்லது 1000டன்களைப் பிழிகின்ற, -அரவைத் திறன் கொண்ட- சர்க்கரை ஆலைகளை ஆங்காங்கே ஒவ்வொரு மாவட்டத்திற்கு பத்தோ, ஆறோ, ஏழோ அல்லது எட்டோ உடனடியாகத் துவக்குகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1995 மார்ச் 20

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைக்கு அனுமதி பெறப்பட்டு இப்போது அங்கே நிர்மானப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. தஞ்சை மாவட்டம், பூண்டியில் ஒரு சர்க்கரை ஆலையை அமைக்கவேண்டும் என்று பூண்டி சுகர்ஸ் என்கிற நிறுவனத்திற்கு, அதாவது தஞ்சை மாவட்டத்தினுடைய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக இருக்கிற, ஐயாவு வாண்டையார் என்பவர் அந்த அனுமதியைப் பெற்றார்கள். அந்த அனுமதியைப் பெற்ற பிறகு, அவர் அந்த ஆலையைக் கட்டாமல், பணியைத் துவக்காமல், 3, 4 முறை மத்திய அரசிடத்திலே அணுகி, அதற்கு எக்ஸ்டன்சன் கேட்டார்கள். 3 முறை அதற்கு நீட்டிப்பு வாங்கியும், அவர் பணியைத் துவக்கவில்லை. இப்போது கடைசியாக அனுமதி நீட்டிப்பு கேட்டபோது, மத்திய அரசு நீட்டிப்பு கொடுப்பதற்கு இல்லை என்று அவர்களுக்கு மறுத்துவிட்டது. (குறுக்கீடு)

**திரு. ஆர். சிங்காரம்:** தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர் என்று சொன்னார். தலைவர் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த' என்று சொன்னார்.

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி:** காங்கிரசிலே எல்லோருமே தலைவர்களாக இருக்கிறார்கள். அதனால் சொன்னேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு வி. பி. சந்திரசேகர்.

**திரு. வி. பி. சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சிப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள், தென்னைக்கு அடுத்தபடியாக அதிகமாக கரும்பைத் தான் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி விளைகின்ற கரும்பை கேரள மாநிலத்திலே இருக்கின்ற சித்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும், பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலைக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை எடுத்துச்செல்கின்ற தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கரும்புகளிலே எல்லாம் எடை குறைவு

*1995 மார்ச் 20]*

ஏற்படுகிறது என்று விவசாயிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்காக இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, பொள்ளாச்சியிலே அரசின் சார்பாக எந்தத் தொழிற்சாலையும் இல்லை என்கின்ற குறையைப் போக்குகின்ற வண்ணம் பொள்ளாச்சிப் பகுதியிலே அரசு சார்பாக ஒரு தொழிற்சாலையைத் துவங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும் உறுப்பினருடைய கருத்திற்காக ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். ஒரு இடத்தில் புதிய சர்க்கரை ஆலை அமைக்கவேண்டுமென்று சொன்னால், கீழ்க்கண்ட தகுதிகள் இருக்கவேண்டும் :-

1. குறைந்தபட்ச அரைவைத் திறனான 2500 டன்கள் நாள் ஒன்றுக்கு அரைப்பதற்கு அங்கே கரும்பு இருக்கவேண்டும்.

2. ஏறத்தாழ 15,000 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட வேண்டும். நாள் ஒன்றுக்கு 2500 டன்கள் நல்ல தண்ணீர் வசதி கிடைக்கவேண்டும்.

3. மூலதனமாக குறைந்தபட்சம் ரூ.50 கோடி நிதி வேண்டும்.

ஆகவே இந்த மூன்று தகுதிகளும் இருந்தால்தான் ஒரு இடத்திலே சர்க்கரை ஆலை அமைக்க இயலும். உறுப்பினர் குறிப்பிடுகிற பொள்ளாச்சி பகுதியில் அத்தகைய வாய்ப்புகள் இல்லையென்பதால் புதியதாக சர்க்கரை ஆலை அமைப்பதற்கு அங்கே வாய்ப்பில்லை. வேண்டுமானால், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை தொழிற்துறையில் முன்னேற்றவேண்டுமென்று முனைப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகின்ற காலகட்டத்தில் பொள்ளாச்சிப் பகுதியில் வேறு தொழில்கள் தொடங்குவதற்கு அரசு உரிய முயற்சியை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு கே. செல்வராஜ்.

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதியதாக தனியார் சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்காக மாநில அரசுகள் மனு செய்கின்றபோது அந்த மனுவை பரிசீலனை செய்து மத்திய அரசுக்கு அனுப்புகின்றபோது அந்த மனுக்களை உடனடியாக பரிசீலனை செய்து அனுமதி கொடுத்து விடுகிறார்களா ?

அப்படி கொடுக்காமல் இருந்தால், எத்தனை சர்க்கரை ஆலைகள் தனியார் கேட்டு, இன்னும் மத்திய அரசு அனுமதி கொடுக்காமல் காலதாமதம் செய்கின்றது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நான் ஏற்கெனவே குறிப்பிட்ட *5* இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்கவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பியது. அப்படி அனுப்பியும் இதிலே அவர்கள் அனுமதி வழங்கவில்லை. வழங்காமல் மத்திய அரசு காலதாமதம் செய்த காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் *2, 3* முறை நினைவூட்டுக் கடிதங்கள் மத்திய அரசுக்கு எழுதினார்கள். அதுமட்டுமல்லாமல் தொழிற்துறை அமைச்சராகிய என்னையும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கண்ணப்பனையும் அனுப்பி *2, 3* தடவை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே பேசுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். நாங்கள் இருவரும் சென்று சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே பேசி வந்தோம். அதற்குப் பிறகு இரண்டு சர்க்கரை ஆலைகளுக்கு மட்டுமே அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். மூன்று மனுக்கள் இன்னும் நிலுவையிலே இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *72*, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**72—**

### மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டம்

**20755*—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திட்டத்தின் கீழ் *1991*-ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட *8*-ஆம் வகுப்பு படித்துள்ள பெண்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?